# 1 ஏக்கர் நிலத்துக்கு கால் கிலோ விதை நெல்



தமிழக வேளாண்துறைச் செயலாளர் சுர்ஜித் கே.சௌத்ரி ஒற்றை நாற்று நடவு முறையைத் தீவிரமாகச் செயல்படுத்தி, சாதனைப் படைத்ததை குறிப்பிட்டுள்ளார். இந்தச் சாகுபடியில் உரத்துக்காகப் பணத்தைக் கொட்ட வேண்டியது இல்லை, மகசூலோ அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் உதயச்சந்திரன், தன்னுடைய மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கரில் ஒற்றை நாற்று நடச்செய்து உழவர் நெஞ்சில் பால் வார்த்திருக்கிறார். வெற்றி பெற்ற உழவர்களைக் கொண்டு வேளாண் அலுவலர்களுக்குப் பாடம் நடத்தச் சொல்லி, இந்தச் சாதனை படைக்கப்பட்டது என்று சொல்லும் ஆட்சித் தலைவர் உதயச்சந்திரன்.

பெருமிதத்துக்குரிய பெருமாள் !

ஒற்றை நாற்று முறையை அரங்கேற்றியதில் ஆலங்குடி பெருமாளுக்கு முக்கியமான இடம் உண்டு. தொடர்ந்து தழை இட்டு, வயலை வளமாக வைத்திருப்பவர் இடைவெளியில் ஒற்றை நாற்று நடவு செய்தார். கைக்கரண்டி (கை வடிவத்தில் இருக்கும் சிறிய கருவி) கொண்டு களை எடுத்தார். ஒரு சதுர மீட்டரில் நான்கே நான்கு நடவு மட்டுமே செய்திருந்தார். அப்படியானால் ஒரு ஏக்கர் பரப்பில் 16,000 நடவு மட்டுமே. இதற்குத் தேவையானது கால் கிலோ நெல், இந்தக் கால் கிலோ நெல் ஒற்றை நாற்றிலிருந்தே விளையமுடியும். என்பது தான் விந்தை. ஒவ்வொரு நாற்றிலும் 80 கிளைகளுக்குக் (கதிர்கள்) குறையாமலிருந்தன. சில தூர்களில் 120 கிளைகளும் இருந்தன. ஒரு தூரை அறுத்து நெற்களைக் கசக்கி, ஊதிச் சுத்தம் செய்த தராசில் இட்டார். கால் கிலோ எடை காட்டியது. ஆமாம் ஒரு ஏக்கர் நடவு செய்வதற்கு கால் கிலோ விதை போதுமானது என்பது பெருமாளின் கண்டுபிடிப்பு.வழக்கமான நடவில் திருவையாறு உழவர் முப்பது கிலோ விதை விட்டு ஒரு ஏக்கர் நிலத்தில் 900 கிலோ அறுவடை செய்திருப்பது சாதனையாக பேசப்படும் நிலைமையில் பெருமாளின் கண்டுபிடிப்பான ஏக்கருக்குக் கால் கிலோ விதை அரியதோர் கண்டுபிடிப்பு.